www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

SALEM DISTRICT

SMS

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

**12** - ஆம் வகுப்பு **பொதுத் தமிழ்**

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

I **அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக :-** 10 X 1 = 10

1. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது
   அ) நம்பிக்கை ஆ) பெருமிதம் இ) புகழ் ஈ) அச்சம்
2. 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
   அ) கு. அழகிரிசாமி ஆ) ஜெயமோகன் இ) புதுமைப்பித்தன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்
3. 'இரண்டு முறை ஒருவன் ஒரே நதியில் இறங்க முடியாது' என்று கூறியவர்
   அ) ஷேக்ஸ்பியர் ஆ) ஹிராக்ளிடஸ் இ) ஸ்ட்ரேபோ ஈ) அரிஸ்டாட்டில்
4. திண்ணியர் என்பதன் பொருள்
   அ) அறிவுடையவர் ஆ) தீக்காய்வார் இ) அறிவினார் ஈ) மன உறுதியுடையவர்
5. ஆர்ப்பரிக்கும் கடல்
   அதன் அடித்தளம்
   மௌனம் ; மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது
   அ) இரைச்சல் ஆ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது
   இ) குறைகுடம் கூத்தாடும் ஈ) நிறைகுடம் நீர்த்தளும்பல் இல்
6. வி.சி.கணேசனுக்கு 'சிவாஜி கணேசன்' என்று பெயரிட்டவர்
   அ) பெரியார் ஆ) அண்ணாதுரை இ) பாலச்சந்திரன் சுள்ளிக்காடு ஈ) ராஜீவ்நாத்
7. பின்வருவனவற்றுள் காப்பியத்தைக் குறிப்பது ................ .
   அ) முத்தகம் ஆ) குளகம் இ) தொடர்நிலை ஈ) தொகைநிலை
8. 'மனித குலத்திற்குத் தேவை போரல்ல ; நல்லுணர்வும் அன்பும்தான்' என்பதை உணர்த்தும் சார்லி சாப்ளினின் படம் ............ .
   அ) மாடர்ன் டைம்ஸ் ஆ) தி கிரேட் டிக்டேட்டர் இ) சிட்டி லைட்ஸ் ஈ) தி கிட்
9. **பொருத்துக.**
   அ) ஆமந்திரிகை - 1. பட்டத்து யானை
   ஆ) அரசு உவா - 2. மூங்கில்
   இ) கழஞ்சு - 3. இடக்கை வாத்தியம்
   ஈ) கழை - 4. எடை அளவு
   அ) 1 2 3 4 ஆ) 4 3 2 1 இ) 3 1 4 2 ஈ) 4 2 1 3
10. தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்ற வெ. இறையன்பின் நூல்
    அ) ஏழாவது அறிவு ஆ) உள்ளொளிப் பயணம் இ) மூளைக்குள் சுற்றுலா ஈ) வாய்க்கால் மீன்கள்

II **எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக :-** 3 X 2 = 6

11. வறுமையும் சிறுமையும் தருவது எது?
12. அறிவுடை வேந்தனின்நெறி குறித்து. பிசிராந்தையார் கூறுவன யாவை?
13. சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள் நான்கினை எழுதுக.
14. பருவத்தே பயிர்செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக :- 5 X 2 = 10

15. *மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.*

அ) அகலக்கால் ஆ) கண்துடைப்பு

16. *தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.*

அ) கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.

ஆ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.

17. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.*

அ) தொழுதனர் ஆ) அறுத்து

18. தொன்மம் - விளக்கம் தருக.

19. *கலைச்சொல்லாக்கம் தருக.*

அ) Cinematography ஆ) Demand Draft

20. *பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்கவும்.*

அ) புல் - புள் ஆ) ஊண் - ஊன்

IV எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக :- 3 X 4 = 12

21. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

22. எங்கிருந்தோ வருகிறது.
வண்ணத்துப்பூச்சியொன்று
பறவைகளும் வரக்கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

23. இலக்கிய நயம் பாராட்டுக.

(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

அந்தியிருளாற் கருகும் உலகுகண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?

*- பாரதிதாசன்*

24. எடுத்துக்காட்டு உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

25. கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதையைக் கொண்டு நிறுவுக.

V விடையளி :- 1 x 6 = 6

26. சங்ககால வரலாற்றை அறிந்துள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக?

*(அல்லது)*

நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

VI அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக :- 4 + 2 = 6

27. அ) "காய்நெல்" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'தொடர்பு' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



M.JEEVA. M.A,B.Ed,M.Phil., PGT (TAMIL)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com